**மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்,**
**விருதுநகர் மாவட்டம் (இ) திருவில்லிபுத்தூர்.**

**வேலைவாய்ப்பு விளம்பர அறிவிப்பு**

**மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஆள்சேர்ப்பு**

விருதுநகர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் காலியாக உள்ள ஒரு (ஒன்று) அலுவலக உதவியாளர் மாற்றுத்திறனாளிகளுக்கான பின்னடைவு காலி பணியிடத்தினை (Backlog vacancy) சிறப்பு ஆள்சேர்ப்பு முகாம் மூலம் நேரடி நியமனத்தின் வாயிலாக நிரப்பிட கீழ்கண்ட விவரப்படி தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பணி நியமனம் முற்றிலும் தற்காலிகமானது.

| வ.எண் | இனச்சுழற்சி | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - **மாற்றுத்திறனாளி** (MBC/DNC) GL- LOCO MOTOR | அலுவலக உதவியாளர் | 1 |

01.07.2025-ல் வயது வரம்பு குறைந்தபட்சம் 18 வயது நிரம்பியிருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு [தமிழ்நாடு அரசு ஊழியர்கள் (நிபந்தனைகள் சேவை) சட்டம் 2016 பிரிவு 64-ன்படி] இருக்க வேண்டும். **மாதிரி விண்ணப்பம் மற்றும் மற்ற விபரங்கள்** https://virudhunagar.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. மேலே கூறிய தகுதிகள் உள்ள மாற்றுத்திறனாளிகள் 25.04.2025 மாலை 5.30 மணிக்கு முன்பாக கல்வித்தகுதி சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ், மாற்றுத்திறனாளிக்களுக்கான சான்றிதழ், சாதிச் சான்றிதழ், வயதுக்குரிய சான்றிதழ், முகவரிக்கான சான்றிதழ் மற்றும் இதர தகுதிகளுக்கான சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் சான்றிட்ட நகல்களுடன் விண்ணப்பங்களை பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் இணைத்து கீழ்கண்ட முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உறையின் மேல் **"வேலைவாய்ப்பு விண்ணப்பம் - அலுவலக உதவியாளர்"** எனக் குறிப்பிடவும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-
தலைவர்,
மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்,
மாவட்ட நீதிமன்ற வளாகம்,
திருவில்லிபுத்தூர்.
விருதுநகர் மாவட்டம்- 626135.

21/3/25

**தலைவர்,**
மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம்,
விருதுநகர் மாவட்டம் (இ) திருவில்லிபுத்தூர்.

21/3/25